# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2325/22 - 2023 මාර්තු මස 28 වැනි අඟහරුවාදා - 2023.03.28

2325/22ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

பி. செ. இல.: BD/BW/LND/6/AQUIS/39.
அமைச்சின் இல.: 4-3/9/2017/WS/110.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாண சபையின் பதுளை மாவட்ட பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவின் பம்பரகம கிராமத்தில் அமைந்துள்ள பதுளை நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட அ.க.பி. 247, மேலதிக இலக்கம் 40, பிரதி இலக்கம் 40 இல் 0.0253 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

**எல்லைகள்:**

வடக்கு: காணி மீள்திருத்த ஆணையாளர் சபை உரிமை கோரும் பம்பரகம அம்பிடிகொடவத்த; கிழக்கு: வீதி (மாகாண வீ.அபி.அதி.); தெற்கு: வீதி (மாகாண வீ.அபி.அதி.) மற்றும் காணி மீள்திருத்த ஆணையாளர் சபை உரிமை கோரும் பம்பரகம அம்பிடிகொடவத்த; மேற்கு: காணி மீள்திருத்த ஆணையாளர் சபை உரிமை கோரும் பம்பரகம அம்பிடிகொடவத்த.

உரிமை கோருபவர்: தலைவர், காணி மீள்திருத்த ஆணையாளர் சபை, கேகரி வீதி, கொழும்பு.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு பண்டாரவளை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித்துண்டை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு

பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ. ஜீ. ஐ. ரீ. ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
பண்டாரவளை.

பிரதேச செயலகம்,
பண்டாரவளை.
2023, பெப்புருவரி 27.

EOG 03 - 0359

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 5/3/5/968-7.
காணி அமைச்சின் இல.: 03/ஜெ/81/LG/279.

காணி எடுத்தற் சட்டத்தின் பிரிவு 7 இன் கீழான 1992.05.27 ஆந் திகதிய 716/12 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மா 968, ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 7 ஆவது பிரிவுக்கு உட்பட்ட பகுதிக்கான நட்டஈட்டு பரிசீலனை திகதி 1992.08.06 என்பது 2023.05.10 எனவும், உரிமையை முன்வைக்க வழங்கப்பட்ட திகதி 1992.07.31 ஆந் திகதி என்பது 2023.05.31 எனவும் மீள் பரிசீலனை மேற்கொள்ளப்படும் எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

பியல் ஜயசூரிய,
பிரதேச செயலாளர்,
தம்புள்ளை.

பிரதேச செயலகம்,
தம்புள்ளை.
2023, மாச்சு 23.

EOG 03 - 0360

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.